(1)

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319477

1. District : மாவட்டம் தென்காசி | PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 06/2026 மு.த.அ. எண் | Date: 20.07.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 | Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 17.07.2026
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 10.00 hrs | Time to : நேரம் வரை 17.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.07.2026 | Time : நேரம் 10.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Taluk office, Tenkasi, 1 Km South.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.அருணாசலம் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.கணபதி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16.06.1974 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் | (g) Address : முகவரி சமூக நீதித்துறை தென்காசி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A-1 திரு.P.ஹரிஹரன், வருவாய் வட்டாட்சியர், தென்காசி, A-2 திரு.C.பாலமுருகன், அ1 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், தென்காசி, A-3 திருமதி.ஜெனிசிஸ்.M.ஷியா, மாவட்ட மேலாளர், தாட்கோ, தென்காசி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

No delay

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 20.07.2026-ம் தேதி காலை 10.30 மணிக்கு M.பால் சுதர், துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது தென்காசி ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் திரு.G.அருணாசலம் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 17.07.2026-ம் இனைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் G.அருணாசலம், வயது 52/26, த/பெ கணபதி, தனி வட்டாட்சியர், சமூக நீதித்துறை, தென்காசி. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி மாவட்டம். அய்யா, பொருள்: தென்காசி மாவட்டம் - வருவாய் துறை – தென்காசி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தை 17.07.2026-ம் தேதி மாலை திடீர் இணை ஆய்வு செய்தபோது கணக்கில் காட்டப்படாத மற்றும் சந்தேகத்திற்குரிய லஞ்சபணம் ரூ.15,000/- கைப்பற்றியது நடவடிக்கை எடுக்க வேண்டுவது தொடர்பாக. தென்காசி மாவட்டம் தென்காசி வருவாய் வட்டாட்சியர் அலுவலக ஊழியர்கள் சான்று வழங்குவதற்கு லஞ்ச பணம் வசூல்

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/7/26

20/7/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.7.2026
12.30 Hrs

Name: பெயர் M. PAUL SUTHER.
Rank: நிலை .....No. எண் .....
DSP. VAAC
Tenkasi

செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் தென்காசி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி, தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதா அவர்களுடன் இணைந்து பெண் தலைமை காவலர் திருமதி.B.பிரவீனா மற்றும் காவலர்கள் உதவியுடன் தென்காசி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தை 17.07.2026-ம் தேதி மாலை 17.00 மணியளவில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த தென்காசி வருவாய் வட்டாட்சியர் திரு.P.ஹரிஹரன் என்பவரின் கறுப்பு கலர் பேக்கில் இருந்து ரூ.10,000/-மும், தென்காசி வருவாய் வட்டாட்சியர் அலுவலக அ1 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.C.பாலமுருகனின் மேஜை டிராவரில் இருந்து ரூ.5,000/-மும் ஆக மொத்தம் பணமாக ரூ.15,000/- கைபற்றப்பட்டது. மேற்படி வருவாய் வட்டாட்சியர் திரு.P.ஹரிஹரன் வைத்திருந்த Samsung Galaxy A17 5G செல்போனில் உள்ள Paytm App ஆய்வு செய்தபோது, M.Abisheik Rafi என்பவரின் செல்போன் எண் 8300934462ல் இருந்து 12.09.2025ம் தேதி ரூ.10,000/-மும், 13.09.2025ம் தேதி ரூ.40,000/-ம் மொத்தம் ரூ.50,000/- வட்டாட்சியர் பெற்றுள்ளார். மேலும் தென்காசி தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி.ஜெனிசிஸ்.M.ஷியாவின் OPPO RENO 15 5G செல்போனில் உள்ள Phonepe App-ஐ ஆய்வு செய்தபோது, muruganselvi3103@okicici என்ற UPI ID-ல் இருந்து 22.04.2026ம் தேதி முதல் 04.07.2026ம் தேதி வரையில் பல தவணைகளாக ரூ.76,700/-ம், சரண்யா ADRA (7448738151) என்ற செல்போன் எண்ணின் UPI ID-ல் இருந்து 18.08.2025ம் தேதி முதல் 12.07.2026ம் தேதி வரையில் பல தவணைகளாக ரூ.30,660/-ம், தூத்துக்குடி தாட்கோ டிரைவர் வேல்ராஜ் செல்போன் எண் 9363754782-ன் UPI ID-ல் இருந்து 11.02.2026ம் தேதி ரூ.10,000/-மும், 12.02.2026ம் தேதி ரூ.840/-ம் ஆக மொத்தம் ரூ.1,18,200/- பெற்றுள்ளார். மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினால் மேற்படி பணம் சான்று வழங்குவதற்கு கையூட்டாக பெற்றதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேலும் ஆன்லைன் பரிவர்த்தனைகளும் சந்தேகத்திற்குரியதாக இருக்கலாம் என்பது தெரிகிறது. இது தொடர்பான செயல்முறை நடவடிக்கை 17.07.2026 மாலை 18.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த வருவாய் வட்டாட்சியர் திரு.P.ஹரிஹரன், அ1 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.C.பாலமுருகன் மற்றும் தென்காசி தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி.ஜெனிசிஸ்.M.ஷியா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றப்பட்ட பணம், செயல்முறை நடவடிக்கை ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd. (அருணாசலம்) 20.07.2026, தனி வட்டாட்சியர், சமூக நீதித்துறை, தென்காசி. Sir, Received the complaint on 20.07.2026 at 10.30 hrs and registered a case in Tenkasi V&AC,

Cr.No.06/2026 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 on 20.07.2026 at 11.30 hrs Sd.M.Paul Suther, 20.07.2026 DSP, V&AC, Tenkasi. 17.07.2026-ம் தேதி தென்காசி இரயில்வேபீடர் ரோட்டில் ரோட்டின் தென்புறம் கதவு எண் 54/1A1ல் கிழக்கு பார்த்து அமைந்துள்ள தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்தை தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் உள்ள தென்காசி ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் திரு.G.அருணாசலம் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை: 1) திரு.G.அருணாசலம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தென்காசி, (ஆதிதிராவிடர் நலத்துறை தற்போது சமூக நீதித்துறை), தென்காசி. 2) திரு.M.பால் சுதர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, தென்காசி. இன்று 17.07.2026-ம் தேதி மதியம் 13.30 மணிக்கு தென்காசி தாலுகா அலுவலகத்தை சோந்த ஊழியர்கள் சான்று வழங்குவதற்கு கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின்படி தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் சமூக நீதித்துறை தனிவட்டாட்சியர் திரு.G.அருணாசலம் அவர்கள் தலைமையில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர், பெண் தலைமை காவலர் திருமதி.B.பிரவீனா மற்றும் காவலர்கள் சகிதம் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 16.45 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0995 மற்றும் இருசக்கர வாகனங்களில் புறப்பட்டு தென்காசி இரயில்வே பாலம் வழியாக இரயில்வே பீடர் ரோட்டில் தென்காசி சட்டமன்ற அலுவலகத்தின் அருகே ரோட்டின் தென்புறம் கிழக்கு பார்த்து அமைந்துள்ள தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து மாலை சுமார் 17.00 மணிக்கு தாலுகா அலுவலக ஊழியர்கள் சான்று வழங்க கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திடீர் தணிக்கை செய்யப்பட்டது.

. மேற்படி தாலுகா அலுவலக கட்டிடத்தின் மெயின் ஹாலின் மெயின் வாசலுக்கு உள்ளே தரைதளத்தின் வடபுறத்தில் உள்ள நில அளவர் பிரிவில் இருந்த வட்ட துணை ஆய்வாளர் திரு.பெரியசாமி, முதுநிலை வரைவாளர் திரு.விஜி குமார், ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேலும் அதே அறையில் மேல்பக்கம் உள்ள சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் திரு.கண்ணன், முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.மகேஷ்வரி, இளநிலை உதவியாளர் திருமதி.நாச்சியார், பிரிவு எழுத்தர் திருமதி.மகேஸ்வரி ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேலும் கீழ்பக்கம் உள்ள சிவில் சப்ளை அலுவலகத்தில் இருந்த இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.ராமன், டேட்டா எண்ட்ரி ஆபரேட்டர் திரு.ஆம்ஸ்ட்ராங் ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில்

காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி நில அளவர் பிரிவிற்கு எதிரே உள்ள அறையில் எலக்ட்ரானிக் வோட்டர் மெஷின் வைத்து சீல் வைத்து பூட்டப்பட்டிருந்தது. போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்தின் முதல் தளத்தில் இடதுபுறம் உள்ள அறையில் நுழைந்ததும் வாசலுக்கு மேல்புறம் வட்டாட்சியர் அறை உள்ளது. மேற்படி வட்டாட்சியர் அறையில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட தென்காசி வட்டாட்சியர் திரு.P.ஹரிஹரன் என்பவர் அறையின் வடக்கு பக்கத்தில் தெற்கு பார்த்து அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.140/- இருந்தது. மேற்படி பணத்தை குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் ரூ.140/-அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்பு அவரிடம் வேறு பணம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டபோது தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். பின்பு அவர் வைத்திருந்த TAGCEA என்று பொறிக்கப்பட்ட கறுப்பு கலர் பேக்கை சோதனை செய்தபோது அதன் முதல் சிப்பில் கத்தையாக பணம் இருந்தது. மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் TMB என சிலிப் வைக்கப்பட்ட ரூ.10,000/- (100X100=10,000) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.P.ஹரிஹரனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.10,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வட்டாட்சியர் திரு.ஹரிஹரன் வைத்திருந்த Samsung Galaxy A17 5G செல்போனை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9865546454 என்ற சிம் இருந்தது. மேற்படி செல்போனில் உள்ள Paytm App ஆய்வு செய்தபோது, M.Abisheik Rafi என்பவர் அவருடைய செல்போன் எண் 8300934462ல் இருந்து 12.09.2025ம் தேதி ரூ.10,000/-மும், 13.09.2025ம் தேதி ரூ.40,000/-ம் தாசில்தாருக்கு அனுப்பியுள்ளார்.

மேற்படி தாலுகா அலுவலக அறையில் வட்டாட்சியர் அறைக்கு எதிரே இருந்த தொழில் நுட்ப உதவியாளர் திரு.பால்ராஜ் பாண்டியன், பதிவறை எழுத்தர் திரு.லிங்கேஷ்வரன், அலுவலக உதவியாளர் திருமதி.கல்யாணி, அ4 இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.தங்கப்பாண்டி, அ3 இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.அபிஜித், அ2 முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.முத்து லெட்சுமி ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி அறையில் அ2 இருக்கைக்கு வடபுறத்தில் உள்ள இருக்கை காலியாக இருந்தது. அதுகுறித்து விசாரித்தபோது அ1இருக்கை என்றும், அலுவலக அறையில் வடமேற்கு பக்கத்தில் உள்ள இருக்கையில் அமர்ந்து வேலை பார்த்துக்கொண்டிருந்த அ1இருக்கை முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.C.பாலமுருகனை

அழைத்து அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.230/- இருந்தது. மேற்படி பணத்தை குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் ரூ.230/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்பு அவரிடம் வேறு பணம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் பணம் இல்லை என்று தெரிவித்தார். பின்னர் அவரது மேஜையை சோதனை செய்தபோது மேஜையின் வலது பக்க மேல் டிராவரில் கத்தையாக பணம் இருந்தது. மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.5,000/- (500X10=5,000) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.C.பாலமுருகனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.5,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையின் வடபுறத்தில் அமர்ந்திருந்த ஆ3 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.முத்தீஸ்வரி, ஆ2 பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.நிர்மல் குமார், தட்டச்சர்கள் திருமதி.சித்ரா, திருமதி.ஜோஸ் செலஸ்டினா ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி தென்காசி தாலுகா அலுவலக அறையின் தென்புறம் கூட்ட அரங்கு உள்ளது.

தென்காசி தாலுகா அலுவலகத்தின் இரண்டாம் தளத்தில் மாடிபடிக்கு நேர் எதிரே உள்ள அறையில் தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகம் உள்ளது. மேற்படி அலுவலகத்தில் இருந்த மேலாளர் திருமதி.ஜெனிசிஸ், இளநிலை உதவியாளர்கள் செல்வி.மேகலா, திரு.செந்தில்குமார், பதிவறை எழுத்தர் திருமதி.தமிழரசி, ஓட்டுநர் திரு.லடசுமணன், அலுவலக உதவியாளர் திருமதி.முப்புடாதி, கணினி இயக்குநர் திருமதி.ராஜேஸ்வரி ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி தாட்கோ மேலாளர் திருமதி.ஜெனிசிஸ் வைத்திருந்த OPPO RENO 15 5G செல்போனை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 8939635492, 7358215477 என்ற இரண்டு சிம்கள் இருந்தது. மேற்படி செல்போனில் உள்ள Phonepe App-ஐ ஆய்வு செய்தபோது, muruganselvi3103@okicici என்ற UPI ID-ல் இருந்து 22.04.2026ம் தேதி முதல் 04.07.2026ம் தேதி வரையில் பல தவணைகளாக ரூ.76,700/-ம், சரண்யா ADRA (7448738151) என்ற செல்போன் எண்ணின் UPI ID-ல் இருந்து 18.08.2025ம் தேதி முதல் 12.07.2026ம் தேதி வரையில் பல தவணைகளாக ரூ.30,660/-ம், தூத்துக்குடி தாட்கோ டிரைவர் வேல்ராஜ் செல்போன் எண் 9363754782-ன் UPI ID-ல் இருந்து 11.02.2026ம் தேதி ரூ.10,000/-மும், 12.02.2026ம் தேதி ரூ.840/-ம் அனுப்பியுள்ளார். மேற்படி பணத்தை அனுப்பியதற்கு வேல்ராஜ் வாட்ஸ்அப்பில் screen shot எடுத்து அனுப்பியுள்ளார்.

மேற்படி மேலாளர் அலுவலகத்தின் வடபுறத்தில் உள்ள அறையில் தென்காசி நகர நிலவரித்திட்ட அலகு-1 மற்றும் அலகு-2, கலால் ஆகிய அலுவலகங்கள் உள்ளது. மேற்படி அலுவலகங்களில் இருந்த அலகு-1 முதுநிலை வரைவாளா திரு.வெங்கடேசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.வெங்கடேஷ்வரன், அலகு-2 முதுநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.மாலதி, முதுநிலை வரைவாளர் திருமதி.பால்தாய், Field surveyor திருமதி.ஜெபர்லின் பெர்சியா ஆகியோரை சோதனை செய்தபோது அவர்களிடம் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை.

மேற்படி தென்காசி தாலுகா வட்டாட்சியர் திரு.ஹரிஹரன் மற்றும் அ1 இருக்கை முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.C.பாலமுருகன் ஆகிய இருவரிடமும் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் மேற்படியாளர்கள் சான்று வழங்க பொதுமக்களிடம் இருந்து லஞ்சமாக பெற்ற பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் மொத்த பணம் ரூ.15,000/- கைப்பற்றப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (17.07.2026) மாலை 18.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். G.அருணாசலம், தனி வட்டாட்சியர், சமூகநீதித்துறை, தென்காசி ஒம்.மற்றும் சிலர்.

The original complaint, Proceedings dated 20.07.2026 of Special Tahsildar, Social Justice, Tenkasi and original FIR were sent to the Hon'ble Principal District Sessions Judge Tenkasi and copies sent to concerned higher officials.

20/7/2026
M. PAULSUTHER.
DSP - Vigilance
Tenkasi